DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | : | **Spl.S.C.No. 2 of 2023** |
| **Deposition of witness for** | : | **PW- 9 (L.W.6)** |
| **Name** | : | தினேஷ் என்கிற நாகராஜ் |
| **Father's Name** | : | சிவஞானராஜா |
| **Age** | : | |
| **Address** | : | |
| **Calling** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**29.04.2026**

**முதல் விசாரணை:**

நான் கொக்கக்காடில் காளம்புழாவில் வசிக்கிறேன். எனக்கு நாகராஜ் என்பதுதான் பெயர், வீட்டில் என்னை தினேஷ் என்று அழைப்பார்கள். நான் வியாபாரம் செய்கிறேன். எனக்கு வழக்கு சம்பந்தமான விவரங்கள் தெரியாது. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. எனக்கு வேறு எந்த விவரமும் தெரியாது. என்னை போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி வேண்டி அனுமதி வழங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை: (அரசு தரப்பில் )** :

போலிசார் என்னை விசாரித்தனர் என்றும், விசாரணையில் 04.02.2021 அன்று சத்தியா என்பவரை எதிரி அமீர் கற்பழித்து விட்டதாகவும் அதன் பிறகு நிஜாமுதின் என்பவர் ஆட்டோவில் சென்று வந்தபோது அவருக்கும் சத்தியாவிற்கும் பழக்கம் ஏற்பட்ட நிலையில் 11.02.2021 அன்று சத்தியாவை வீட்டில் கொண்டு போய் விடுவதாக சொல்லி தொரப்பள்ளி காட்டிற்கு அழைத்து சென்று கட்டாயப்படுத்தி அவருடன் உடலுறவு வைத்துக் கொண்டதாகவும் இது சம்பந்தமான புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாவும் 15.08.2021 அன்று 14.30 மணிக்கு நானும் அப்துல் ரபீக்கும் எனது வீட்டின் வெளியில பேசிக்கொண்டு இருந்தபோது அங்கு வந்த போலிசார் மேற்படி விவரங்களை சொல்லி சம்பவ இடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்ததாகவும் பார்வை மகசரில் உடன் இருந்து நாங்கள் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் கூறிவிட்டு தற்பொழுது எதிரிகள் எங்கள் உள்ளுர் காரர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் தவறு. எதிரிகள் எங்கள் ஊர்காரர்கள் என்பது சரி. ஆனால் அவர்கள் எனக்கு பழக்கம் இல்லை.

**குறுக்கு விசாரணை: (எதிரிகள் தரப்பில் )** : இல்லை.

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.04.29 17:16:23 +0530